# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்:98/2011 வள்ளிநாயகம் (வாசா1) தேதி:01.09.2025**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 25 முதல் 29 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வாதி கோவிலில் தற்போது செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி கோவிலின் செயல் அலுவலர் விபத்தின் காரணமாக மருத்துவவிடுப்பில் உள்ளார். 31.08.2025 வரை மருத்துவிடுப்பு எடுத்திருந்த நிலையில் அவர் தற்போது மேலும் ஒருமாதத்திற்கு மருத்துவவிடுப்பு நீட்டிப்பு செய்துள்ளார். நான் அந்தஅடிப்படையில் வாதி கோவிலின் செயல்அலுவலர் கூடுதல் பொறுப்பாக அவர்வரும் வரை பணிநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளேன். இந்தவழக்கு சம்பந்தமாக கோப்புகளை நான் பார்வையிட்டேன். அந்த கோப்பில் வழக்கு சொத்து சம்பந்தமான விவரம் சொத்து பதிவேடு ஆவணத்தில் உள்ளதா என்றால் உள்ளது. தாவாசொத்திற்கு சொத்து பதிவேடுஆவணம் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பார்த்துதான் கூறமுடியும். வாதி கோவிலின் சொத்து பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.அந்த சொத்து பதிவேடு ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து பதிவேடு ஆவணத்தை இந்தவழக்கில் தாக்கல் செய்தால்தான் தாவாசொத்து வாதி கோவிலுக்கு சொந்தமானதா என தெரியவரும் என்றால் சரிதான். இந்தவழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது சொல்லப்பட்ட மற்றும் கொடுக்கப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கோப்புகளின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் நான் பார்வையிட்ட கோப்புகளில் இல்லை என்றாலும் அவை தற்போது நகல் எடுக்கப்பட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நகல்கள் அனைத்தும் 2025 ம்வருடம் ஜுலை மாதம்தான் நீதிமன்றத்தில் நகல்கள் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நகல்கள் தற்போதுதான் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்த ஆவணங்கள் இல்லாமலே பிராதில் மேற்படி கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு

தெரியவில்லை. மேற்படி கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS No.263/1985 வழக்கில் வாதிகோவில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். வாசாஆ.21 ஆவணத்தில் சொத்துவிவரம் காட்டப்படாமல் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கில் கண்டசொத்தை பொறுத்து வாதி ஜெயராஜ் என்பவர் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை, கணக்குகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தவழக்கு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்தவழக்கில் வாதி கோவில் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த வழக்கில் கண்டசொத்து வாதி கோவிலுக்கு சொந்தமானது என பிராதில் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பொதுவாக ஒருவழக்கில் வாதியாக இருந்து விளம்புகை பரிகாரம் கோரி அந்தவழக்கு அனுமதிக்கப்பட்டால் தான் அந்த சொத்தை பொறுத்து உரிமைமூலம் கோரமுடியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி கோவிலின் நிர்வாக அதிகாரி கோபால்சாமி என்பவர் வாசா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு அவரது சாட்சியத்தை இந்தவழக்கில் வாசாஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சாட்சிய விசாரணையில் அந்தவழக்கு சம்பந்தபட்ட உரிமைகோரும் ஆவணங்கள் கோவில்வசம் இல்லை என அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். மேலும் அவரது சாட்சியத்தில் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் இனாம்தாரர் என்ற முறையில் கோவில்வசம் இருந்தது என்றும் இனாம்ஒழிப்பு திட்டத்திற்கு பின்னர் அந்த நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டது என்றும் பின்னர் அனுபவத்தை பொறுத்து அனுபவதாரர்கள் பெயரில் அரசால் பட்டா வழங்கப்பட்டத என்றாலும் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.